**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2,சங்ககிரி,**

**சேலம் மாவட்டம்.**

முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,

2026 –ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை

ஸ்ரீபராபவ ஆண்டு ஆனி மாதம் 04–ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் –357/2025**

**CNR No. TNSA09-002155-2025**

தமிழ்நாடு அரசுக்காக
(State of Tamil Nadu Rep.by)
சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்.
குற்ற எண். 332/2025 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

திரு. பழனி (57/2025),
த/பெ. காவேரி,
1090, பாப்பாபட்டி காட்டுவளவு,
இடங்கணசாலை,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ... எதிரி

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:42:40 +0530

| S. No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | Sentence or order | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trial | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | | |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** | **13** | **14** | **15** | **16** | **17** |
| 1 | Magudamchavadi PS. Cr.No. 332/2025. | Palani | Kaveri | Wages | 1090, Pappapatty Kattuvalavi, Edanganasalai, Sankari Tk, Salem DT. | 57/2025 | 24.08.2025 | 24.08.2025 | 24.08.2025 | 24.08.2025 (Station Bail) | N.A | 24.12.2025 | 18.06.2026 | Nil | 18.06.2026 | N.A |

| SI. No. | Particulars | Details | | |
|---|---|---|---|---|
| **I.** | Period of Remand of Accused | Nil (Station Bail) | | |
| **II.** | Date of filing of Final Report in Court | 05.11.2025 | | |
| **III.** | Date of questioning of accused under section 230 B.N.S.S | 17.12.2025 | | |
| **IV.** | Filing of Miscellaneous petitions and their result | Nil | | |
| **V.** | Date of examination in chief and cross-examination of witnesses | Witness | Chief | Cross |
| | | PW1 | 17.03.2026 | 17.03.2026 |
| | | PW2 | 17.03.2026 | 17.03.2026 |
| **VI.** | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S | 08.06.2026 | | |
| **VII.** | Details of abscondence of accused | Nil | | |

**CC.No. 357/2025**

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:42:46 +0530

| | | |
|---|---|---|
| | and his appearance / production | |
| VIII. | Grant of stay by superior Court and the result thereof | Nil |
| IX. | Final Order | In the result, Accused is found not guilty and acquitted under Section 271(1) of B.N.S.S for the offence under Section 4(1)(C) Tamil Nadu Prohibition Act and he be set at liberty. |

**<u>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

**JUDGMENT IN CC. NO. 357 OF 2025 ON THE FILE OF THE**

**PRESENT: Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**

**(Thursday, Dated: 18th day of June 2026)**

| | |
|---|---|
| Complainant | Special Sub Inspector of Police, Magudamchavadi. |
| Accused | Mr. Palani (57/2025), S/o. Kaveri |
| Offence | Under Section 4(1)(C) Tamil Nadu Prohibition Act. |
| Finding | Accused is found not guilty and acquitted for the offence under Section 4(1)(C) Tamil Nadu Prohibition Act. |
| Sentence | In the result, Accused is found not guilty and acquitted under Section 271(1) of B.N.S.S for the offence under Section 4(1)(C) Tamil Nadu Prohibition Act and he be set at liberty. |

இவ்வழக்கானது கடந்த 05.11.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தில் C.C. No. 357/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 18.06.2026–ம் தேதி விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. C. கோபதி,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:42:51 +0530

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற

**தீர்ப்புரை**

**1.** கடந்த 24.08.2025 – ம் தேதி காலை 12.00 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், இடங்கணசாலை, பாப்பாபட்டி TASMAC அருகே எதிரி பழனி என்பவர் அரசு மதுபானமான சுமார் 180 ML அளவு கொண்ட 05 – Black Pearl பிராந்தி பாட்டில்களை உரிய அரசு அனுமதி இன்றி அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததற்காக எதிரி திரு.பழனி மீது சட்டப்பிரிவு 4(1)(C) Tamil Nadu Prohibition Act–ன் கீழ் குற்றம் புரிந்ததாக மகுடஞ்சாவடி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) Tamil Nadu Prohibition Act –ன் கீழ் புலன் கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 230 of B.N.S.S–வின் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி எதிரியிடம் குற்றம் பற்றி விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எதிரி



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:42:57 +0530

மீதான முதற்நோக்கிலான குற்றத்திற்கு போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) Tamil Nadu Prohibition Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, அவரிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. அரசுத்தரப்பில், இவ்வழக்கில், பட்டியல் சாட்சிகள் 1–ஐ விசாரிக்க வேண்டியதில்லை என்று கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

4. அரசுத்தரப்பில், சாட்சியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனை படித்து காண்பித்து பிரிவு 351(1)(ஆ) B.N.S.S–ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரி அதனை பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

6. எதிரிதரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:03 +0530

**7.** அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவை மூலமாக அரசுத்தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழுங்கவேண்டும் என்று அரசுதரப்பில் வாதிடப்பட்டது.

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | **திரு. செந்தில்குமார்– தலைமை காவலர்** | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் கையொப்பம் செய்த சாட்சி மற்றும் இவ்வழக்கு விபரத்தை கூறுபவர். |
| அ.சா.2 | **திரு. மயில் கணேசன் – சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** | இவ்வழக்கின் புலன் விசாரணை செய்த விபரத்தைப் பற்றி கூறும் சாட்சி |

Chart for Exhibited Documents:

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1–ன் இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | அழித்தல் மகஜரில் உள்ள | அ.சா.1 |



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:08 +0530

| | | |
|---|---|---|
| | அ.சா.1ன் இராண்டாவது சாட்சி கையொப்பம் | |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | அழித்தல் மகஜர் | அ.சா.2 |

**8. கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில்,**

**a). இவ்வழக்கில், சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரியிடமிருந்து 180 ml அளவுக்கொண்ட 05 Black Pearl பிராந்தி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என்பதை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும்,**

**b). இவ்வழக்கின் எதிரி தான், சம்பவ சமயத்தில், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.**

9. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட சட்டப்பிரிவு 4(1)(C) Tamil Nadu Prohibition Act–ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:13 +0530

**<u>அரசுத்தரப்பு சாட்சி, தனது முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்:</u>**

**10.(a). அ.சா. 1 திரு. செந்தில்குமார், தலைமை காவலர்,** தனது முதல் விசாரணையில், "1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.08.2025 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு மகுடஞ்சவாடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரும், நானும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், இடங்கணசாலை, பாப்பாபட்டி Tasmac அருகில் கண்காணித்துக் கொண்டு சென்றபோது பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த பழனி (57) த/பெ. காவேரி, பாப்பாபட்டி காட்டுவளவு, இடங்கணசாலை கிராமம், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் சுமார் 180ML அளவுள்ள கொண்ட 05 Black Pearl பிராந்தி பாட்டில்களை உரிய அரசு அனுமதி இன்றி விற்பனை செய்தற்காக போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து காவல் உதவி ஆய்வாளர் 12.15 மணிக்கு கைது செய்தார்.

2. மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:18 +0530

அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த என்னையும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரையும் சாட்சிகளாக வைத்து 12.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்த மகஜர் தயார் செய்தும் எங்கள் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **(கைப்பற்றுதல் மகஜாரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.1 மற்றும் அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 13.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 332/2025 u/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(b). அ.சா.2 திரு.மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,** தனது முதல் விசாரணையில், " 1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.08.2025 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு மகுடஞ்சவாடி காவல் நிலைய காவல் உதவி



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:24 +0530

ஆய்வாளரும், தலைமை காவலர் திரு.செந்தில்குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், இடங்கணசாலை, பாப்பாபட்டி Tasmac அருகில் கண்காணித்துக் கொண்டு சென்றபோது பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த பழனி (57) த/பெ. காவேரி, பாப்பாபட்டி காட்டுவளவு, இடங்கணசாலை கிராமம், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் சுமார் 180ML அளவுள்ள கொண்ட 05 Black Pearl பிராந்தி பாட்டில்களை உரிய அரசு அனுமதி இன்றி விற்பனை செய்தற்காக போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்துபிடித்தனர்.

2. மேலும், விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து காவல் உதவி ஆய்வாளர் 12.15 மணிக்கு கைது செய்தும், மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில் அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த தலைமை காவலர் திரு.செந்தில்குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரையும் சாட்சிகளாக வைத்து 12.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்த



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:29 +0530

மகஜர் தயார் செய்தும் தலைமை காவலர் திரு.செந்தில்குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் தலைமை காவலர் திரு.செந்தில்குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் K.S.மணி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். பின்னர் 13.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 332/2025 u/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வாக்குமூலங்கள் பதிவு செய்து மேற்படி ஆவணங்களை மாண்புமிகு நீதிமன்றத்திற்கு அனுப்பியும், வழக்கின் புலன் விசாரணையை முடித்து 24.08.2025 தேதியில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. (a) இவ்வழக்கில், சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரியிடமிருந்து 180 ml அளவுக்கொண்ட 05 – Black Pearl பிராந்தி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என்பதை அரசுத்தரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று வாதிட்டார்.**

<u>மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:</u>



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:35 +0530

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

**11.(b).** அ.சா.1 திரு.செந்தில்குமார், தலைமை காவலர், அ.சா.2 திரு. மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், ஆகிய அரசுதரப்பு சாட்சிகள், தங்களது முதல் விசாரணையில், சம்பவ சமயத்தில், எதிரியிடமிருந்து, 180 ml அளவுக்கொண்ட 05 – Black Pearl பிராந்தி பாட்டில்கள் கைப்பற்றுதல் மகஜரின் வாயிலாக கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கில், வழக்கு சொத்து கைப்பற்றிய பின்னர் தான், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற நிலையில், மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னரே மேற்படி முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண், கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.(c).** இவ்வழக்கில், வழக்குச்சொத்து கைப்பற்றிய பிறகு, பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் எண், எவ்வாறாக இவ்வழக்கு சொத்தை கைப்பற்றும் சமயத்தில், கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது. மேலும், இவ்வழக்கில் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்ததாக கூறப்படும் கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து மடிக்கணினி அல்லது தட்டச்சு இயந்திரத்தால் தட்டச்சு செய்யப்பட்டதாகவோ, அதை யார் தட்டச்சு செய்தார் என்பதையோ, அதை எங்கு வைத்து



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:41 +0530

யார் பிரிண்ட் அவுட் எடுத்தார்கள் என்கிற எந்தவொரு விபரத்தையும் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறாத நிலையில், எவ்வாறாக சம்பவயிடத்தில் வைத்து கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜர், தயார் செய்யப்பட்டிருக்க இயலும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே இவ்வழக்கில், தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர், சம்பவயிடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என்ற ஐயம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

**11.(d).** அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருசாட்சிகளும் தங்களது குறுக்கு விசாரணையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கில், சம்பவயிடத்தை குறிப்பிட்டு காட்ட, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யாதது, இவ்வழக்கு சம்பவம் எங்கு வைத்து நடைப்பெற்றது என்ற விவரத்தை தகுந்த ஆவணத்தின் வாயிலாக இந்நீதிமன்றத்திற்கு அரசுதரப்பு தெளிவுபடுத்தவில்லை. எனவே, இவ்வழக்கில், சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரியிடமிருந்து 180 ml அளவுக்கொண்ட 05 – Black Pearl பிராந்தி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என்பதை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:46 +0530

**12. (a). இவ்வழக்கின் எதிரி தான், சம்பவ சமயத்தில், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசுத்தரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்:**

மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

**12.(b).** அ.சா.1, தனது குறுக்கு விசாரணையில், மேற்படி மதுபான பாட்டில்களை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி, அது பிராந்தி தான் என்று சான்று பெறவில்லை என்றும், அ.சா.2, தனது குறுக்கு விசாரணையில், மதுபான பாட்டிலை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி, அது பிராந்தி தான் என்று சான்று பெறவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களிடம், எதிரிதரப்பு குறுக்கு விசாரணையின் போது, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்குச்சொத்து பிராந்தி அல்ல என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:51 +0530

**12.(c).** மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர், தங்களது சாட்சியத்தில், மேற்படி மதுபான பாட்டில்களை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி அது பிராந்தி தான் என்று சான்று பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்சொன்ன சாட்சியத்தை இந்நீதிமன்றம் ஆய்வு செய்ததில், இவ்வழக்கின் எதிரி, தன்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள் பிராந்தி அல்ல என்று கேள்வி எழுப்பியுள்ள நிலையில், மேற்சொன்ன பானம் பிராந்தி என்பதை அரசுதரப்புதான் நிரூபிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மேற்படி மதுபானங்களை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி, மேற்சொன்ன பானம் பிராந்தி தான் என்று சான்று எதுவும் பெறப்படாத நிலையில், இவ்வழக்கில் சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்குச்சொத்து பிராந்தி தான் என்று அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கின் எதிரி, மேற்படி மதுபானங்களை, என்று, எந்த மதுபான கடையில் வாங்கினார் என்றோ, அதை எங்கு கொண்டு சென்று, யாரிடம் அதிகவிலைக்கு விற்க வைத்திருந்தார் என்றும், அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் கூறவில்லை.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:43:57 +0530

**12.(d).** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937, சட்டப்பிரிவு 32-ன் கீழ், கள்ளச்சாராயம்/கள் கைப்பற்றினால், மதுவிலக்கு அலுவலர் முன்னிலையில் அல்லது ஆய்வாளர் படி நிலைக்கு குறையாத காவல் அதிகாரி முன்னிலையில் தான் மேற்படி கள்ளச்சாராயத்திலிருந்து மாதிரிகள் எடுக்கவும், மேற்படி கள்ளச்சாராயத்தை, மேற்படி முன்னிலையாகியிருந்த அலுவலரின் முன்பு அழிக்கப்பட்டு, அவரிடம், அழிக்கப்பட்ட கள்ளச்சாராயத்தின் மொத்த அளவு, எடுக்கப்பட்ட மாதிரிகளின் மொத்த அளவு முதலியன குறிப்பிடப்பெற்ற சான்றிதழ் ஒன்றை பெற்று, அவ்வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி முன்னிலையாகியிருந்த அலுவலரின் முன்பு தான் இவ்வழக்கில், கைப்பற்றப்பட்ட மது அழிக்கப்பட்டதென்றோ, மேற்படி அலுவலர் மது அழிக்கப்பட்டதற்கு சான்று வழங்கினார் என்றோ, அரசுத்தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை. எனவே, இவ்வழக்கில், தமிழ்நாடு மது விலக்குச் சட்டம் 1937, சட்டப்பிரிவு 32-ஐ கடைபிடித்து, இவ்வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்குத் தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கில், முன்னிலையாகியிருந்த அலுவலரின் சான்று தாக்கல் செய்யப்படவில்லை.

**12.(e).** தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 சட்டப்பிரிவு 32-ன்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:44:02 +0530

கீழ் கள்ளத்தனமாக தயாரிக்கப்படும் கள்ளச்சாராயம்/கள் சட்டமுறைப்படி அழிப்பதற்கான முறை குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், இவ்வழக்கில், கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பானம், கள்ளச்சாராயம் அல்ல என்றும் அது அரசினால் விற்கப்படும் மதுவகை என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிய வந்துள்ள நிலையில், மேற்சொன்ன பிராந்தியை அழிக்க இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவரும் சூழ்நிலையில், அரசு அனுமதியுடன் விற்கப்படும் மதுபானத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32–ன் கீழ் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு அழிக்க அதிகாரம் இல்லாத நிலையில், மேற்சொன்ன பானம் அழித்தல் மகஜர் தயாரிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக கூறும் விவரம் மேற்சொன்ன தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32–க்கு முரணாக அமையப்பெற்றுள்ளது. மேலும், வழக்குச்சொத்து சம்பவ சமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதா என்ற ஐயமும் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

**12.(f).** தனிமனித உபயோகத்திற்காக உள்நாட்டில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்களை 4.5 லிட்டர் வைத்திருக்கலாம் என்ற சட்டவிதி அமலில் இருக்கும் நிலையிலும், இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மேற்சொன்ன சம்பவயிடத்தை



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:44:09 +0530

அருதியிட்டு காட்ட பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தை அரசுதரப்பு இவ்வழக்கில் தாக்கல் செய்யாத நிலையில், இவ்வழக்கின் எதிரி தான், சம்பவ சமயத்தில், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசுத்தரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி, இவ்வழக்கின் எதிரியின் மீது வனையப்பட்ட சட்டப்பிரிவு 4 (1) (C) Tamilnadu Prohibition Act–ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், மேற்படி எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டான சட்டப்பிரிவு 4 (1) (C) Tamilnadu Prohibition Act–ன் கீழ் அவர் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, மேற்சொன்ன எதிரியை பிரிவு 271(1) B.N.S.S–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**14.** இவ்வழக்கில், வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**15.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது எதிரி பிணையில் சென்றுள்ளார். வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:44:14 +0530

பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 18–ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:44:21 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**பின் இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசுதரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுதரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திரு. செந்தில்குமார், தலைமை காவலர் |
| அ.சா.2 | திரு. மயில் கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:**

| அரசுதரப்பு சான்றாவணங்களின் வரிசை எண் | தேதி | அரசுதரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.08.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1–ன் இரண்டாவது சாட்சி கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 24.08.2025 | அழித்தல் மகஜரில் உள்ள அ.சா.1–ன் இரண்டாவது சாட்சி கையொப்பம். |
| அ.சா.ஆ.3 | 24.08.2025 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 24.08.2025 | கைப்பற்றுதல் மகஜர். |
| அ.சா.ஆ.5 | 24.08.2025 | அழித்தல் மகஜர் |

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்கள்:</u>**

–இல்லை–

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

–இல்லை–

**<u>பிற்சேர்க்கை:</u>**

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை

3) வழக்கின் முடிவு அரசுத்தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) முடிவில், எதிரிக்கு பிரிவு 271(1) B.N.S.S–ன் படி விடுதலை வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.06.18 16:44:28 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

Judgment uploaded on online 18.06.2026.

**CC.No. 357/2025**